# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.க.கோபால கிருஷ்ணன், B.E.,**

**ந.க.எண்.1445/2019/திருவள்ளூர்-2** **நாள்.19.12.2020.**

பொருள்: மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருவள்ளூர் மாவட்டம் - ஆர்.கே.பேட்டை வட்டம் - வீரமங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.558/2pt-ல் 9.88 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை:
1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம், ந.க.எண்.345/2019/அ6, நாள்.19.03.2019.
2. மனுதாரர், தி/ள்.A.L.மணிகண்டன் மற்றும் இருவர், அவர்களின் இணையதள விண்ணப்ப எண்.201905401010619, நாள்.22.02.2019.
3. அரசாணை (Ms) எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.06.2003.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 14619/1988/பிசிசி, நாள்.27.04.1988.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 40483/1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 16985/2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
9. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.09.10.2019.(சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
10. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியம் கடிதம், நாள்.09.10.2020 (தானபத்திர எண்.466/2020, நாள்.11.02.2020, மற்றும் தீர்மான எண்.15/2020, 07.10.2020-ல், மின்சார வாரியம் தானபத்திர எண்.1978/2020, நாள்.10.09.2020., நகல் பெறப்பட்டுள்ளது) திருத்தல் பத்திரம் எண்.3039/2020,நாள்.08.12.2020.
11. இவ்வலுவலக கடிதம் இதே எண்.நாள்.15.12.2020 (நன்னிலை வரி மற்றும் பரிசீலனை கட்டணம் கோரியது ).
12. மனுதாரர், தி/ள்.A.L.மணிகண்டன் மற்றும் இருவர், கடிதம் மற்றும் இணைப்புகள், நாள்.15.12.2020 (நன்னிலை வரி பரிசீலனை கட்டணம் செலுத்தியது ).
13. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.16091/2016/MP1, நாள்.11.05.2017.
14. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
15. வேளாண்மை இணை இயக்குநர் (பொ), திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.மதி1/3435/2019, நாள்.30.05.2019 (புன்செய் நில தடையின்மைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.)
16. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண். 12201/2017/ Spl. Cell. நாள்.28.09.2017.
17. அரசாணை (நிலை) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.09.12.2020.

*****

**உத்தரவு :**

1. திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை வட்டம், வீரமங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.558/2pt-ல் 9.88 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதலுக்கு, பார்வை 1-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

249

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு **ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.141/2020** என எண்ணிடப்பட்டு, இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 10-ல் காணும் கடிதம் மூலம் சாலை (ம) உள்ளாட்சிக்குரிய பொது ஒதுக்கீடுகள் மின்வாரியத்திற்கான பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான தானப்பத்திர நகல் பெறப்பட்டுள்ளது. மேலும், பார்வை 12-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.47,400/-(ரூபாய் நாற்பத்தி ஏழாயிரத்து நாநூறு மட்டும்)** பரிசீலனைக் கட்டணம் **ரூ.60,500/-(ரூபாய் அறுபதாயிரத்து ஐநூறு மட்டும்)** ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

4. மேலும், பார்வை 4, 5, 6 மற்றும் 7-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 3-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப் பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71 RDLA dated:16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

8. பார்வை 10-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. அரசாணை (நிலை) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட வீரமங்கலம் ஊராட்சி ஒன்றிய பொறியாளர், தலைவர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று மற்றும் மழைநீர் கால்வாய் குடிநீர் வழங்கல் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, தெரு விளக்குகள் அமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

**<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>**

1. பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. பார்வை 13-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்சித் துறை ந.வ.4(3), நாள்.4.5.2017-ல்,

a) இனம் 3-ல் மேற்படி மொத்த மனைப்பிரிவு இடத்திற்கு ரூ.1000/- கூராய்வு கட்டணமாக உள்ளாட்சி பெற்றுக் கொண்டும்,

b) இனம் 9-ன்படி, "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of account and grant permission carrying out the development." என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனையின் பரப்பிற்கு 3% சந்தை மதிப்பு (Market value of land) தொகையை அரசுக் கணக்கில் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சி இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

**Head of Account**

"0217 Urban Development 60 - Other Urban Development Schemes - 800 Other Receipts - AS Receipts Under Land Use Conversion Charges - 27 Non Taxation fees - 09 collections".
(DPC: 0217-60-800-AS-2790)

3. பார்வை 14-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. பார்வை 16-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Words Estate Project with the Real Estate Regulatory Authority".

19/12/2020

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

19-12-2020

**இணைப்பு :**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -2 Nos.

**பெறுநர் :**
தலைவர் / நிர்வாக அலுவலர்,
வீரமங்கலம் ஊராட்சி மன்றம்,
ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
ஆர்.கே.பேட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

**நகல் :**
1. திரு.A.L.மணிகண்டன், M. சந்திர சேகர் மற்றும் M. சங்கர்,
எண்.33, பஜார் தெரு, சோளிங்கர்,
இராணிபேட்டை மாவட்டம் - 631 102.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-02,
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம்.
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

original. 253

ஊராட்சி மன்றத் தலைவர் வீரமங்கலம் ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.இராணி

ந.க.எண்: 01/2020 நாள்: 28.12.2020.

பொருள் மனைபிரிவு – திருவள்ளூர் மாவட்டம் - இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம் - வீரமங்கலம்A ஊராட்சி - கிராம சர்வே எண் 558/2-ல் 9.88 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி அமைத்தல் நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களால் அனுமதி வழங்கியது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) இரா.கி.பேட்டை அவர்களின் கடித எண் 345/2019/அ6, நாள் 19.03.2019.
2. அரசாணை எண் 71 ஊரக வளர்ச்சி துறை நாள் 16.06.2003.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் மண்டலம் எண் 43/397A இரண்டாம் சாலை அன்னை இந்திராகாந்தி நகர், திருவள்ளூர் அவர்களின் கடித எண் 1445/2019/திவம2, நாள் 19.12.2020.
4. சார்பதிவாளர் இரா.கி.பேட்டை அவர்களின் கடித எண் 152/2020, நாள் 22.12.2020.
5. ஊராட்சி மன்றத் தலைவர் வீரமங்கலம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் 15 நாள் 07.10.2020.

------------

இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம், வீரமங்கலம் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண் 558/2-ல் 9.88 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் பெறுவதற்கு பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சி தானமாக பூங்கா 30663 ச.அ மற்றும் சாலைகள் 129800 ச.அ, மூலை முடக்குகள் மற்றும் ஊராட்சிக்காக 1629ச.அ ஆக மொத்தம் 161985.5 சதுர அடிகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டு பார்வை 1ல் காணும் கடிதத்தின் வழியே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களுக்கு மனைப்பிரிவிற்கு வரைப்படம் மற்றும் தொழில் நுட்ப அனுமதிக்கு ஒப்புதல் வழங்கிட வேண்டி அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் இரா.கி.பேட்டை சார்பதிவாளர் அவர்களிடமிருந்து அரசு மதிப்பு (Market Value of land) மற்றும் சந்தை மதிப்பு ஒரு சென்டிற்கிற்கு ரூ. 7035 என பெறப்பட்டு Land use of conservation charge 3% வீதம் ரூ. 7035 X 988 சதுர அடி பரப்பளவிற்கு மொத்தம் ரூ.208518/- மட்டும் விண்ணப்பத்தாரரிடமிருந்து பெறப்பட்டு அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகை பற்று மேற்கொள்வது அரசு ஆணைகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்றும், இம்மனைபிரிவிற்கு கூராய்வுக் கட்டணம் ரூ. 1000/- மட்டும் விண்ணப்பதாரரிடமிருந்து வீரமங்கலம் ஊராட்சிக்கு பல்வகை இரசீது மூலம் செலுத்தியுள்ளார்.

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களின் பார்வை 4-ல் காணும் கடிதத்தின்படி நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி

அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்தி, மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும், மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு மற்றும் உள்ளாட்சி துறை அல்ல'' என்பதை விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பார்வை 2ல் காணும் அரசாணைகள் மற்றும் பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்றும் பார்வை 5ல் காணும் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் வீரமங்கலம் ஊராட்சி மன்றத் தீர்மானத்தின்படி அங்கீகரித்து இம்மனைப்பிரிவிற்கு வரைப்படத்திற்கு மேலொப்பம் செய்து இறுதி ஒப்புதல் வழங்குதல் இந்த உரிமையானது உங்களுக்கு சொந்தமில்லாத இடத்தில் மனைப்பிரிவுகளுக்கு விற்கவோ வாங்கவோ உரிமையளிக்காது என்பதை தெரிவித்து உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு:
வரைப்படம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகள்.

ஊராட்சி மன்றத் தலைவர்
வீரமங்கலம் ஊராட்சி

பெறுநர்

திரு.A.L.மணிகண்டன், திரு.M.சந்திரசேகர்,
மற்றும் திரு.M.சங்கர்,
எண்.33, பஜார் வீதி, சோளிங்கர்,
இராணிபேட்டை மாவட்ம்.

நகல்

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவள்ளூர் , அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் எண் 43/397A இரண்டாம் சாலை அன்னை இந்திராகாந்தி நகர்-II, திருவள்ளூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. சார்பதிவாளர் அலுவலகம், இரா.கி.பேட்டை அவர்களுக்கு தகவலுக்காக.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரின் ஒதுக்கீடு விவரம்

| ஒதுக்கீடு விவரம் | அளவுகள் | | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 9.88 ஏக்கர் (430373 ச.அடி) | | |
| மனையிடத்தின் பரப்பளவு | 300573 ச.அடி | | |
| சாலையின் பரப்பு | 129800 ச.அடி | | |
| உள்ளாட்சிக்குரிய பகுதி | 1629 ச.அடி | | 0.54 |
| மின்வாரியத்திற்குரிய பகுதி | 1710 ச.அடி | | 0.56 |
| ஒதுக்கிய மனைகள் | 155(107+48) | | -- |
| EWS மனைகள் | 48 (59 முதல் 67 வரை, 70 முதல் 108 வரை அகியவை EWS மனைகள் ஆகும்) | | |
| **பொது ஒதுக்கீடுகள்** | | | |
| பூங்கா | 30663 ச.அடி | | 10.20 |
| **விற்பனைக்குரிய பகுதி** | | | |
| கடை-I | 2375. சஅடி | 5818 ச.அடி | 1.35 |
| கடை-II | 2375. சஅடி | | |
| கடை-III | 1068. சஅடி | | |
| EWS மனைகள் பரப்பளவு | 30400 ச.அடி | | 10.11 |

ஊராட்சி மன்றத் தலைவர்,
வீரமங்கலம் ஊராட்சி

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate